

சென்னை நீலாங்கரையில் நடந்த விழாவில் 4044 கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். இதில் அரவிந்த் ரமேஷ் எம்எல்ஏ, துணை ஆணையர் அதாப் ரசூல், மண்டல குழு தலைவர் மதியழகன், ரவிச்சந்திரன் கலந்து கொண்டனர்.

## கார்கில் வெற்றி நகரில் மகளிருக்கு கர்ப்பப்பை பரிசோதனை முகாம்: அதிமுக கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் தொடங்கி வைத்தார்



**திருவொற்றியூர், பிப்.13**

சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம் மேற்கு பகுதியில் உள்ள 7 வது வட்டத்திற்கு உட்பட்ட கார்கில் வெற்றி நகரில் அமைந்துள்ள நாராயணா பார்ட்டி ஹாலில் மகளிருக்கான புற்று நோய் விழிப்புணர்வு கருத்தரங்கம் ' நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியினை 7 வது வட்ட அதிமுக மாமன்றஉறுப்பினர் டாக்டர்கே.கார்த்திக் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தார்.இந்த முகாமில் மகளிருக்கு மார்பக புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை புற்று நோய் சோதனை நடைபெற்றது. ஆண்களுக்கும் புற்று நோய் சோதனை நடைபெற்றது.இந்தநிகழ்ச்சியினை கல்பவிருக்சம் குழுமத்தினர் ஏற்பாடு செய்தனர். மருத்துவர் பானுப்பிரியா தலைமையில் டாக்டர்அபர்ணா பரிசோதனையில் சோதனை முகாம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் அதிமுக வட்ட செயலாளர்கள் எம்.கண்ணன், எஸ்.ஸ்டிபன், நிர்வாகிகள் பொன்.செல்வம் கே.மணிமாறன் ஏ.செந்தூர்பாண்டி, ஸ்டாலின்,கதிர் வேல் அமுதா, எம்.பிரபு, எஸ்.கோபி, தமிழரசி சுப்பிரமணியம், வெங்கடேசன், சீனிவாசன், ஆனந்த்பாபு, மணிவேல் பார்த்தசாரதி, எம்.செல்வம், ஜெகதீசன், சுப்பிரமணியம், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



வடசென்னைவளர்ச்சித்திட்டத்தின்கீழ்புழல்,மகாலட்சுமிநகர்மாநகராட்சிநடுநிலைப்பள்ளி கட்டிடம்,எண்ணூர்சமுதாயநலக்கூடம்மற்றும்வணிகவளாககடைகள்,தண்டையார்பேட்டை நவீன பேருந்து நிலையம் மற்றும் மூலகொத்தளம் சமுதாய நலக்கூடத்தின் முன்னேற்றப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி, சிஎம்டிஏ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், துணை ஆணையாளர்.கட்டா ரவி தேஜா கலந்து கொண்டனர்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு சூரிய மின் பலகை பொருத்தும் பயிற்சி: தாட்கோ மேலாண்மை இயக்குனர் தகவல்

**சென்னை பிப் 13-**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் டாக்டர் ரெட்டி நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கு சூரிய மின் பலகை பொருத்தும் தொழில்நுட்ப வல்லுநர் பயிற்சி தாட்கோமேலாண்மை இயக்குனர் தெரிவித்தார்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் டாக்டர் ரெட்டி நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கு சூரிய மின் பலகை பொருத்தும் தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்படவுள்ளது என தாட்கோ மேலாண்மை க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும்வ் மேம்பாட்டுக் கழக (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ மற்றும் டாக்டர் ரெட்டி நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு சூரிய மின் பலகை பொருத்தும் தொழில்நுட்ப வல்லுநர் பயிற்சி ( வழங்கப்படவுள்ளது.இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சேர்ந்த இளைஞர்களாகவும் 18 முதல் 32 வயது வரை நிரம்பியவராக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.லட்சத்துக்குள் இருக்க வேண்டும். பத்து, பன்னிரெண்டாம் வகுப்பு, தொழிற்பயிற்சி, பட்டயப்படிப்பு, பொறியியல் படிப்பு மற்றும் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சி காலம் 45 நாட்கள் ஆகும். இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு தேசிய திறன் மேம்பாட்டுக் கழக அங்கீகார சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்புடன் ஆரம்பகால மாத ஊதியமாக ரூ.18,ஆயிரம் முதல் ரூ.30,ஆயிரம் - வரை கிடைக்க வழி வகை செய்யப்படும். வேலைவாய்ப்பினை விரும்பாத இளைஞர்கள் சுயமாக தொழில் தொடங்குவதற்கு தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும். இப்பயிற்சி பெற தாட்கோ இணையதளமான www.tahdco.com என்ற முகவரில் விண்ணப்பிக்கலாம். மேலும் சென்னை உள்ள விடுதியில் தங்கி படிக்கும் வசதி உணவுக்கான செலவினம் டாக்டர் ரெட்டி நிறுவனம் மூலமாக ஏற்கப்பட உள்ளது என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

## பெரம்பூரில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம் நாளை நடக்கிறது

**சென்னை,பிப்.13**

சென்னை திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர், எவர்வின் வித்யாஷ்ரம் சீனியர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 14.02.2026 அன்று சனிக்கிழமை "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம் 15ஆவது கட்டமாக நடைபெறவுள்ளது. இந்த மருத்துவ முகாம் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மன நல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்தியமுறை மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம் மற்றும் ஸ்கேன் பரிசோதனை ஆகிய 17 துறைசார் நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகள், அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனை, முழுமையான உடல் ஆரோக்கிய பரிசோதனை, ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறது. திரு.வி.க. நகர் மண்டலம், பெரம்பூர், எவர்வின் வித்யாஷ்ரம் சீனியர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 14.02.2026 அன்று நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமில் பொதுமக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# சென்னை திரு வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள்: மேயர் ஆர்.பிரியா நேரில் பார்வையிட்டு ஆய்வு



**சென்னை,பிப்.13**

மேயர் ஆர். பிரியா (12.02.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முதல்வர் படைப்பகம், பல் நோக்குக் கட்டடம், பூங்கா, நகர்ப்புற ஆரம்ப சுகாதா நிலையம், சென்னை பள்ளிக் கட்டடம் புனரமைப்பு, உடற்பயிற்சிக் கூடம், வணிக வளாகம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேயர் அவர்கள், வார்டு-74க்குட்பட்ட சுப்பராயன் தெருவில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகத்திற்கான கட்டுமானப் பணி, பாஷ்யம் 2வது தெருவில் மாநகராட்சி சார்பில் ரூ.66.05 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல் நோக்கு மையக் கட்டடப் பணி, சோமசுந்தரம் நகரில் உள்ள ஓ.எஸ்.ஆர். நிலத்தில் பூங்கா மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பது தொடர்பாகவும்,

மங்களபுரம் கிருஷ்ண தாஸ் சாலையில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகக் கட்டுமானப் பணி, டேங்க் பங்க் சாலையில் மாநகராட்சி சார்பில் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடப் பணி, ஏகாங்கிபுரம் சென்னை நடுநிலைப்பள்ளியில் சிஎம்டிஏ சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணி, ஏகாங்கிபுரம் முதல் தெருவில் மாநகராட்சி சார்பில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு தற்போது செயல்பட்டு வரும் உடற்பயிற்சிக் கூடத்தின் செயல்பாடுகள் குறித்தும்,

பெரம்பூர் பிரதான சாலையில் மாநகராட்சி சார்பில் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அறிவியல் பூங்கா கட்டமைப்புப் பணி, ஜமாலியா பகுதியில் சிஎம்டிஏ சார்பில் ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகக் கட்டுமானப் பணிஉள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

ஆய்வின்போது, மேயர் பொதுமக்களுக்கு பயனளிக்கக் கூடிய நலத்திட்டப் பணிகளை திட்ட மதிப்பீட்டு காலத்திற்குள் விரைந்து முடித்திட பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, மண்டல அலுவலர்ஜி. சொக்கலிங்கம், உதவிப் பொறியாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## யானைகவுனி ஜெயின் கோவிலில் தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களை திருடிய வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை பிப் 13-**

சென்னை, பட்டாளம் பகுதியில் வசித்து வரும் சுரேஷ் குமார், என்பவர் யானைகவுனி, மிண்ட் தெருவில் உள்ள ஸ்ரிசந்திரபிரபு ஜெயின் நயா மந்தீர் என்ற கோவில் டிரஸ்டில் பொது செயலாளராக பொறுப்பு வகித்து வருவதாகவும், கடந்த ஆண்டு 14.02.2025 அன்று காலை பார்த்தபோது, கோவில் கதவுகளின் பூட்டு உடைக்கப்பட்டு சாமி சிலைகளில் அணிவித்திருந்த சுமார் 10 கிலோ எடை கொண்ட 5 வெள்ளி கிரீடங்கள் மற்றும் சாமி சிலைகளின் நெற்றியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 600 கிராம் எடை கொண்ட தங்கப்பட்டைகள் திருடு போயிருப்பதாகவும், சுரேஷ்குமார் என்பவர் யானைகவுனி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.யானைகவுனி காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை வைத்து தீவிர விசாரணை செய்ததில் ஒரு நபர் முகமூடி அணிந்து இருட்டில் டார்ச் லைட் உதவியுடன் மேற்படி தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்களை திருடியதும், இதே போல தெலுங்கானா மாநிலத்தில் உள்ள 2 ஜெயின் கோயில்களில் நடைபெற்ற திருட்டிலும் அதே நபர் ஈடுபட்டிருப்பதும் தெரியவந்தது. மேலும் அந்த எதிரி கர்நாடகா மாநிலத்தில் ஒரு குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே சென்று நீதிமன்றத்தில் ஆஜராகாமல் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதும் எதிரி அடிக்கடி பல்வேறு இடங்களுக்கு இருப்பிடத்தை மாற்றி, தற்போது, மகராஷ்டிரா மாநிலம், புனேயில் பதுங்கியிருப்பதும் தெரியவந்ததின் பேரில், காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் உயரதிகாரிகள் உத்தரவுப்பெற்று புனே விரைந்து சென்று தக்க புலன் வைத்து மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரி ஜீவன்சிங், என்பவரை கைது செய்து, அவர் கொடுத்த தகவலின்பேரில், மேற்படி திருடிய ஆபரணங்களை வாங்கிய ராஜ்பவு ரத்தோர், என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரையும் 09ந் தேதி அன்று நவிமும்பை, பெலாபூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, 2வது எதிரி ராஜ்பவு ரத்தோர் என்பவரை விடுவித்து, முக்கிய எதிரி ஜீவன் சிங் மீது டிரான்சிட் வாரண்ட் வழங்கி, நேற்று முன் தினம் சென்னைக்கு அழைத்து வந்தனர்.

மேலும் விசாரணையில் எதிரி ஜீவன்சிங், தமிழ்நாட்டில் சேலம், செங்கல்பட்டு மாவட்டம், கர்நாடகா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் உள்ள ஜெயின் கோயில்களிலும் இதே போல திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டுள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி ஜீவன்சிங் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

## மேட்டுகுப்பம் எம்.ஜி.ஆர் சாலை ஆக்கிரமிப்பு அகற்ற கோரி மாநகராட்சி கமிஷ்னரிடம் முன்னாள் கவுன்சிலர் மனு

**சென்னை,பிப்.13**

சென்னை மாநகராட்சி 148 வது வார்டு மேட்டுகுப்பம் எம்.ஜி.ஆர் சாலையில் ஆக்கிரமிப்பு அகற்ற கோரி சென்னை மாநகராட்சி கமிஷ்னர் குமரகுருவிடம் அதிமுக முன்னாள் கவுன்சிலர் எம்.கே குமார் மனு அளித்துள்ளார்.இப்புகாரில் கூறியிருப்பதாவது:-

**ஆக்கிரமிப்பு**

சென்னை மாநகராட்சி வளசரவாக்கம் மண்டலம் 148 வது வார்டுக்கு உட்பட்ட நெற்குன்றம் மேட்டுகுப்பம் எம்.ஜி.ஆர் சாலையில்( பெரிய தாங்கல் கரை சாலை) அங்குள்ள தனியார் பள்ளி அருகே கடந்த 2022 ஆம் ஆண்டு அந்த சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த 22 வீடுகள் சென்னை உயர் நிதிமன்றம் உத்தரபடி ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றபட்டது. தற்போது மாநகராட்சி மூலம் இந்த சாலையில் புதிதாக நடை பாதை அமைத்துள்ளனர்.அதில் சாலையோர கடைகள் தற்போது ஆக்கிரமித்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்பு அகற்றி அந்த இடத்தில் புதிதாக சாலையோரா பூங்கா அமைத்து ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்றார்.

இவ்வாறு புகார் மனுவில் கூறியுள்ளார்.

## ஓராண்டு வரக்கூடாது என்ற தடையை மீறி சென்னைக்குள் நுழைந்த ரவுடி கைது

**சென்னை பிப் 13-**

சென்னை மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சென்னை பெருநகர காவல் எல்லைக்குள் நுழைந்து பொதுமக்களின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய போக்கிரிகளை கண்டறிந்து அவர்கள் மீண்டும் சென்னை பெருநகர காவல் எல்லைக்குள் இதுபோன்று கொடுஞ்செயல்களில் ஈடுபடுவதை தடுக்கும் பொருட்டு சென்னை பெருநகர காவல் ஆணையர் மஆ.அருண், உத்தரவின்பேரில், திருவல்லிக்கேணி மாவட்ட காவல் துணை ஆணையர் அவர்களால் பொதுமக்களின் உயிருக்கும் உடமைக்கும் அச்சுறுத்தல் தரக்கூடிய மற்றும் தங்களுக்கு எதிரான வழக்குகளில் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய சாட்சிகளை மிரட்டக்கூடிய வரலாற்று பதிவேடு உடைய போக்கிரிகளாக கண்டறியப்பட்டு பரிந்துரை செய்யப்பட்ட 1.அஜய் ரோகன், வ/36, பனையூர், சென்னை 2.நாகேந்திர சேதுபதி, வ/33, இராமநாதபுரம் மாவட்டம், 3.பிரேம்குமார், 4.ராஜா 5.செல்வபாரதி,வசம்க் ஆகிய 5 பேரை மீதுசெப்டம்பர் 13.ந் தேஹிம அன்று சென்னை நகர காவல் சட்டம் பிரிவு 51 ஏ-ன் படி வெளியேற்றுதல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட நபர்களில் அஜய் ரோகன் என்பவர் 3 வழக்குகளிலும் 2.நாகேந்திர சேதுபதி என்பவர் 4 வழக்குகளிலும் 3.பிரேம்குமார் என்பவர் 3 வழக்குகளிலும் 4.ராஜா என்பவர் 1 குற்ற வழக்கிலும், 5. செல்வபாரதி என்பவர் 2 வழக்குகளிலும் சம்பந்தப்பட்டுள்ளார்.

**தடை**

இதன் மூலமாக கடந்த செப்டம்பர் மாதம் 13.மேற்படி நபர்கள் மற்றும் போக்கிரிகள் சென்னை பெருநகர காவல் நிலைய எல்லைக்குள் நீதிமன்ற வழக்கு தொடர்பாகவோ அல்லது காவல்துறையினர் விசாரணை தொடர்பாகவோ இல்லாமல் வேறு எந்த ஒரு காரணத்திற்காகவும் நுழைவது ஒரு ஆண்டு காலத்திற்கு முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவை மீறும் பட்சத்தில் மேற்படி போக்கிரி உட்பட 5 நபர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது

**உத்தரவு**

இந்நிலையில் மேற்படி எதிரிகளில் பிரேம்குமார், என்பவர் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்களின் வெளியேற்ற ஆணை உத்தரவை மீறி நேற்று முன் தினம் சென்னை பெருநகர காவல் எல்லைக்குள் நுழைந்த குற்றத்திற்காக நுங்கம்பாக்கம் போலீசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குப்பின்னர் எழும்பூர், 14 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி 25. ந் தேதி வரை சிறையில் அடைக்கப்பட்டார்.

## தீபாவளி பண்டு சீட்டு நடத்தி ரூ.27.05 லட்சம் பணம் பெற்று ஏமாற்றிய வழக்கில் கணவன், மனைவி கைது

**சென்னை பிப் 13-**

சென்னை, தி.நகர், தர்மாபுரம் பகுதியில் வசித்து வரும் சங்கீதவாணி, என்பவர் அதே பகுதியில் வசித்து வரும் தினேஷ்குமார் மற்றும் அவரது மனைவி புவனேஷ்வரியிடம் கடந்த 2021ம் ஆண்டு முதல் தீபாவளி பண்டு சீட்டு கட்டி வந்துள்ளார். அந்த நம்பிக்கையின்பேரில், சங்கீத வாணி மீண்டும் 2023-2024ம் ஆண்டு அவருக்கு அறிமுகமான நபர்கள் மூலம் 250 பேரை சேர்த்து பிரதி மாதம் ரூ.ஆயிரம் வீதம் 11 மாதங்களுக்கு சுமார் ரூ.27.5 லட்சம் பணத்தை வசூல் செய்து, தினேஷ்குமார் மற்றும் அவரது மனைவியிடம் கொடுத்துள்ளார். ஆனால் கணவன் மனைவி இருவரும் சீட்டு முதிர்வடைந்தும் பணத்தை தராமல் தொடர்ந்து ஏமாற்றி வந்துள்ளனர். இது குறித்து சங்கீதவாணி கடந்த 23.03.2025 அன்று சௌந்திரபாண்டியனார் அங்காடி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது, போலீசார் மோசடி மற்றும் சீட்டு மோசடி பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.சௌந்திரபாண்டியனார் அங்காடி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில் புகார்தாரர் குறிப்பிட்டிருந்தது உண்மையென தெரியவந்ததின்பேரில், மேற்படி மோசடியில் ஈடுபட்டு தலைமறைவாக இருந்த எதிரி 1.தினேஷ்குமார், அவரது மனைவி 2.புவனேஷ்வரி, ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 4 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப்பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

## கிண்டி பகுதியில் அரிவாளுடன் சுற்றி திரிந்தவர்கள் கைது

**சென்னை பிப் 13-**

சென்னை கிண்டி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் கிண்டி, நாகிரெட்டி தோட்டம், காலி மைதானம் அருகே கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த 5 பேருடன் வந்தவர்களிடம் விசாரித்து கொண்டிருந்தபோது. அவர்கள் கையில் வைத்திருந்த அரிவாள்களால் காவல் குழுவினரை தாக்க முற்பட்டு தப்பியோட முயற்சித்தபோது, காவல் குழுவினர் 2 நபர்களை மடக்கிப் பிடித்து விசாரணை செய்தனர்.

சென்னை கிண்டி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணை செய்ததில் பிடிபட்ட நபர்கள் குற்றச் செயலில் ஈடுபடும் நோக்கில் கையில் ஆயுதங்களை வைத்திருந்தது தெரியவந்தது. அதன்பேரில், கிண்டி காவல் நிலையத்தில் ஆயுத சட்ட பிரிவில் வழக்குப் பதிவு செய்து எதிரிகள் 1.தினேஷ், , ஆகிய இருவரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 2 அரிவாள்கள், 1 செல்போன் மற்றும் 1 ஆட்டோ ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரிகள் இருவரும் அவர்களது நண்பர்களுடன் சேர்ந்து வேளச்சேரி பகுதியில் ஸ்பா சென்டருக்குள் நுழைந்து வழிப்பறி சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதும், மேலும் எதிரி தினேஷ் மீது போதைப்பொருள் உட்பட 4 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. மேலும் தப்பியோடிய 3 நபர்கள் வேளச்சேரி ஸ்பா சென்டர் வழிப்பறி வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்

## அப்போலோ மருத்துவமனை 8ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரோபோடிக் அறுவை சிகிச்சை சாதனை

**சென்னை பிப் 13-**

அப்போலோ மருத்துவமனைகள் பல்வேறு மருத்துவப் பிரிவுகளில் 8,ஆயிரம் -க்கும் மேற்பட்ட ரோபோடிக் (எந்திர மனித கரம் மூலம் செய்யப்படும் அறுவை சிகிச்சை) உதவியுடனான அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து சாதனை படைத்துள்ளது. மிகத் துல்லியமான மற்றும் நோயாளிகளின் ஆரோக்கியத்தையும் நலனையும் முன்னிறுத்தும் சிகிச்சைகளில் அப்போலோ மருத்துவமனைகள் தொடர்ந்து காட்டிவரும் அர்ப்பணிப்பில் இது ஒரு மிக முக்கிய மைல் கல்லாகும்.

**சிகிச்சை வசதி**

இந்தச் சாதனையின் மூலம், தமிழ்நாட்டின் பன்னோக்கு சிறப்பு மருத்துவப் பிரிவுகளுக்கான மிகப்பெரிய ரோபோடிக் அறுவை சிகிச்சைத் திட்டத்தையும், சென்னையின் மிக விரிவான ரோபோடிக் அறுவை சிகிச்சை கட்டமைப்பப்பையும் அப்போலோ மருத்துவமனை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள நோயாளிகளுக்கு அதி நவீன மற்றும் துல்லியமான சிகிச்சை வசதிகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**ரோபோடிக்**

அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் என்டர்பிரைஸ் லிமிடெட்டின் நிர்வாகத் துணைத் தலைவர் டாக்டர் ப்ரீதா ரெட்டி இது குறித்துப் பேசுகையில், "அப்போலோ மருத்துவமனைகளைப் பொறுத்த வரை நவீன தொழில்நுட்பம் என்பது எங்களது இறுதி இலக்கு அல்ல அதையும் தாண்டி இதுவரையில்லாத சிறந்த மருத்துவத் தீர்வுகளை அளிப்பதற்கும், நோயாளிகளின் சிகிச்சை அனுபவத்தை மேம்படுத்துவதற்குமான ஒரு வழிமுறையாக பின்பற்றி வருகிறோம். நாங்கள் ரோபோடிக் சிகிச்சைகளுக்கான வசதிகளை விரிவுபடுத்தும்போது, 8,ஆயிரம் ரோபோடிக் அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து முடித்திருக்கிறோம் என்று கூறினார்.

